www.tamilarangam.net



வெளியீடு 2

அன்பார்ந்த தமிழ் மக்களே!

## அரசியல் தீர்வும் அணுகுமுறைகளும்

ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே, நோர்வே அரசின் அனுசரணையுடன், புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியிருக்கிறது.

இந்த உடன்படிக்கை, ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர்நிறுத்தத்தையே மையமாகக் கொண்டுள்ளது. அத்துடன், இருசாராரும் தொடர்ந்து நடாத்திய போரின் விளைவாகத் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்ட பொருளாதாரத்தடை, போக்குவரத்துத் தடை ஆகியவை நீக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ்மக்கள் பெரும் நிம்மதி அடைந்துள்ளார்கள். இவ்வகையில், இந்த உடன்படிக்கை வரவேற்கப்படவேண்டியதே.

எனினும், இந்த உடன்படிக்கை அதன் உண்மையான தாற்பரியத்திற்கு மேலாக ஏதோ ஒரு நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட்டுவிட்டது போன்ற மாயையை மக்கள் மத்தியில் தோற்றுவித்திருக்கிறது.

போர் நிறுத்தம், பொருளாதார — போக்குவரத்துத் தடைகளின் நீக்கங்கள், மக்களுக்கு வேண்டியதுதான். ஆனாலும், ஈழவிடுதலைக்கான ஆயுதப்போர் ஆரம்பமாவதற்கு முன்னர், தமிழர்களாகிய நாம், பொருளாதார — போக்குவரத்துத் தடைகளின்றி, இப்போதைய நிலைமைபோல் வடகிழக்குப்பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் விரிந்து பரந்த முகாம்களின் ஆக்கிரமிப்புகளும் இன்றி வாழ்ந்தவர்கள். ஈழவிடுதலைப்போரின் அடிப்படைக் காரணமே தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் புறக்கணிப்பட்டதனால்தான். தடைகளின் நீக்கங்கள்தான் வேண்டியவையென்றால், இத்தனை உயிர், உடைமை அழிவுகள், சின்னாபின்னப்படுத்தப்பட்ட வாழ்வுகள், சமுதாயச்சீரழிவுகள் எல்லாமே அர்த்தமற்றவையாகப்போய் விடும். — நியாயமற்றவையாகி விடும்.

இச்சமயத்தில், தமிழர்களாகிய நாம் இன்னுமொரு வரலாற்றுச் சம்பவத்தை நினைவு கூரவேண்டும் — 1987ம் ஆண்டு ஜெயவர்த்தனா அரசின் இராணுவம் வடமாராட்சியைக் கைப்பற்றப்போகும் வேளையில் அன்றைய இந்தியப் பிரதமர் ராஜுவ்காந்தியின் இந்திய அரசு இலங்கையின் வட பகுதிக்குப் போர்விமானங்களை அனுப்பி, அவற்றின் மூலம் உணவுப் பொருட்களைப்போட்டு, ஸ்ரீலங்கா அரசின் மீது அழுத்தத்தைக் கொடுத்து போர்நிறுத்தத்தை ஏற்படுத்தியதுமட்டுமன்றி ஓர் அரசியல் தீர்வையும் ஏற்படுத்தியது.

திருக்கோணமலையைத் தலைநகராகக் கொண்டு, வடக்கு கிழக்கு மகாணங்கள் இணைந்த ஒரு தமிழ்மாநிலத்தை, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் ஆட்சிபுரியும் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட்டது சரித்திர உண்மை.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கை இந்திய — இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்பட்டதுபோல்கூட எதுவித அரசியல்தீர்வையும் உள்ளடக்கவில்லை. இந்திய — இலங்கை ஒப்பந்தத்தில் இல்லாத ஒரு அம்சம் மட்டும் இதில் உள்ளது. தமிழ்ப் பகுதிகளில் சில பகுதிகளில் புலிகளின் அதிகாரமும், சில பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரது அதிகாரமும் செல்லுபடியாக வழி செய்யப்பட்டிருக்கிறது — அவ்வளவுதான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல தரப்புகளினாலும் பிரயோகிக்கப்பட்ட ஆயதக்கெடுபிடிகள் தளர்த்தப்பட்டு, சுமுகநிலை தோன்றியதை மக்கள் வரவேற்கிறார்கள் என்பது உண்மை. அந்த உணர்வுகளை — தமிழ்மக்களின் போரற்ற சூழலில் வாழ விரும்பும் வேட்கையைப் பிரதிபலிக்கும் வெளிப்பாடுகளை — திரிபுபடுத்தி, வெவ்வேறு கோரிக்கைகளுக்கான எழுச்சிப் போராட்டமாகச் சித்தரிப்பது, மக்களை நிரந்தரப்போர் என்னும் பொறிக்குள் சிக்கவைக்க முயல்வதாகவே முடியும்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில், இந்த உடன்படிக்கை தமிழ்மக்களின் இராணுவவெற்றி என்ற நிலமையைப் பரவவிடுவது போன்ற வீறாப்பு அரசியல், சிங்களமக்களிடையே தமிழர்களுக்கு எதிரான துவேஷத்தை மேலும் பெருக்குவதற்கு முயலும் தீயசக்திகளுக்கு ஒரு வாய்பை அளிப்பதாகவே அமையும்.

இவையெல்லாம்,

நந்தவனத்திலோர் ஆண்டி
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி —
அதைக் கூத்தாடி கூத்தாடி
போட்டுடைத்தாண்டி

- என்ற நிலமைக்குக் கொண்டுவிடக் கூடாது என்பதில் நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.

நோர்வே அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே இருக்கும் இடைவெளியைக் குறைக்கலாமேயன்றி எதுவித அழுத்தங்களையும் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். உதாரணமாக, நோர்வே அரசினால் இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒஸ்லோ உடன்படிக்கையில் பாலஸ்தீனிய இயக்கத்தின் இராணுவ அந்தஸ்தின் அங்கீகாரம் இருந்தும், மீண்டும் இரு சாராருக்குமிடையில் உக்கிரமமான பகைமைகளும், சண்டைகளும், அழிவுகளுமே நடந்துகொண்டிருக்கின்றன. இதனைக் கவனத்தில் கொண்டு, அது எங்களுக்கும் ஏற்படாதவாறு நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சர்வதேச அரசியல் நிதர்சனத்தில் நோர்வேயின் வரையறையை கருத்தில் எடுத்து நாம் செயல்படவேண்டும்.

ஐந்துகோடிக்கும் மேலான தமிழ்மக்களைக்கொண்ட அண்டைநாடான இந்தியாவின் ஆதரவு எமக்கு இன்றியமையாதது. அத்துடன், மற்றைய நாடுகள், ஸ்ரீலங்காவில் தலையிடுவது, தனது பிராந்திய செல்வாக்கிற்குப் பங்கமென இந்தியா கருதினால், அது வாளாவிருக்கப்போவதில்லை. இது இந்தியாவினது மட்டுமல்ல — எல்லா நாடுகளினதும் பூளோகஅரசியல் யதார்த்தமாகும்.

எங்களுக்கு எல்லா வகையிலும் இந்தியாதான் இயற்கையான நட்பு நாடாக இருக்கவேண்டும், இருக்க முடியும். ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையே நடாத்தப்படும் பேச்சுக்கள் இந்தியாவின் தென்னகரம் ஒன்றிலே நடப்பதையே தாங்கள் விரும்புவதாக விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவித்திருப்பது, இந்த யதார்த்தத்தை விடுதலைப் புலிகளின் தலைமை அங்கீகரித்திருப்பதையே காட்டுகிறது. ஆனாலும், அந்த அங்கீகாரங்கூட குழப்பமான சமிக்ஞைகளைக் கொண்டவையாக இருக்கின்றன.

இந்த உடன் படிக்கையின் ஒரு ஷரத்தின் பிரகாரம், ஆயுதம் தாங்கிப்போராடிய விடுதலைப் புலிகளைச்சாராத மற்றைய தமிழ்அமைப்புகள் தங்களிடமிருக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயுதங்களைக் கையளித்துவிட்டு ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேர்ந்து வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் செயலாற்றவேண்டும். இச் ஷரத்து, மற்றைய தமிழ்அமைப்புகள் யாவும் ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேருவதுதான் தங்களின் நோக்கமாக இயங்கியவைபோல் சித்தரிக்கின்றது. இந்த அமைப்புகளில் சேர்ந்து தமிழர்களின் உரிமைக்காக ஸ்ரீலங்கா இராணுவத்திற்கெதிராக போர்புரிந்தவர்கள், தங்கள்வாழ்வை அர்ப்பணித்தவர்கள், அவர்களின் உற்றார் உறவினர் பெற்றோர், தமிழர்களின் உரிமைக்காக இன்னமும் தங்களாலானவற்றைச் செய்துகொண்டிருப்பவர்கள் யாவரையும் ஒட்டுமொத்தமாக அந்நியப்படுத்துகிறது. இது தமிழர்களின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கு உகந்ததல்ல என்பது எமது எண்ணம். ஸ்ரீலங்கா இராணுவத்தில் யாரைச்சேர்ப்பது, அவர்கள் எங்கு கடமையாற்றுவது என்பதெல்லாம் ஸ்ரீலங்கா இராணுவம் செய்ய வேண்டிய முடிவு.

சகோதரப் படுகொலைகளைத் தவிர்த்து, தமிழ் கட்சிகள் ஜனநாயகரீதியில் இயங்கி, யார் மக்களைப் பிரதிநிதிப்படுத்தவது என்பதை மக்களின் தீர்வுக்கே விட்டுவிடவேண்டும். இதுவே ஒரு நாகரிக அரசியலுக்கு அடிகோலுவதாக அமையும்.

சில யதார்த்தங்களை நாம் உணர்ந்தாகவேண்டும். அறிவை அடகு வைத்து, உணர்வுகளுக்கு அடிமையாகும் நிலையிலிருந்து நாங்கள் விலக வேண்டும். போர் மறுபடியும் மூளாதிருக்க, நிரந்தர சமாதானம் நிலவிட, ஓர் நியாயமான அரசியல் தீர்வு ஏற்பட்டாக வேண்டும். சிங்களமக்களின் ஐயங்களுக்கு மேலும் தூபம் போடும் நடவடிக்கைகளை நாம் தடுத்து நிறுத்திட வேண்டும். காலத்தை மேலும் தாழ்த்தாது அரசியல்தீர்வுக்கான முயற்சிகளுக்கே முதன்மை ஸ்தானம் கொடுத்தாக வேண்டும்.

இது பேச்சு வார்த்தைகள் மூலந்தான் முடியும். இதற்குப் பெரும்பான்மையான தமிழ், சிங்களக் கட்சிகளின் ஒத்துழைப்பு வேண்டும். ஓரளவு விட்டுக் கொடுப்புகளுக்கு இருசாராரும் தயாராக இருக்க வேண்டும். இதற்கு, இந்தியா உட்பட வெளிநாடுகளின் அனுசரணையும், ஆதரவும், அழுத்தமும் வேண்டும்.

இக்காலகட்டத்தில், நாம் சுயசிந்தனையற்றவர்களாக செயற்படுவோமானால், தெண்டனிடுவதே நம்தொழில் என இருப்போமானால், சந்தர்ப்பங்களை மறுபடியும் வீணடிப்போமானால், நாம் வரலாற்றுத் தவறு இழைத்தவர்களாகிவிடுவோம்.

இரு இனங்கள் மத்தியிலும் உள்ள பெரும்பாலோனாரால் போர்நிறுத்தம் இதயசுத்தியுடன் வரவேற்கப்படுகின்றது. இருதரப்பிலும் உள்ள தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் மீண்டும் எம்மக்கள் யுத்தம் எனும் சகதிக்குள் சிக்காதிருக்க விரைவான அரசியல் தீர்வு இன்றியமையாதது. எனவே, அரசியல் யதார்த்தங்களை கவனத்தில் எடுத்து, ஒரு நிரந்தர அரசியல்தீர்வை முறையான, தெளிவான, அணுகுமுறைகளுடன் முன்னெடுப்பதற்கு தமிழ்மக்கள் நாம் அனைவரும் — மக்கள் நலனில் உண்மையாகவே அக்கறைகொண்ட அனைவரும் — வேண்டிய அழுத்தங்களை இருதரப்பினருக்கும் கொடுக்கவேண்டுமெனக் கோருகிறோம்.

21 MARCH 2002

Tamil Progressive Movement
B.M. BOX NO: 1738
LONDON WC1X 3NN
U.K.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்